மாண்புமிகு சார்பு நீதிமன்றம், மானாமதுரை

**O.S. No. 25/2021**

2023ம் ஆண்டு ஜனவரி மாதம் 4-ஆம் தேதி புதன்கிழமை

வா.சா. பூமாதேவி

குறுக்கு விசாரணை: (பிரதிவாதி தரப்பில்)

என்ன பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. வழக்கின் விபரம் எனக்கு நேரடியாக தெரியாது. எனது கணவருக்கு தான் தெரியும். எத்தனை இலக்க சொத்திற்க வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் 3 இலக்க சொத்திற்கு வழக்கு தாக்கல் செய்துள்ளேன். 3 இலக்க சொத்தின் பட்டா எண், சர்வே எண், நான்குமால் தெரியுமா என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. வழக்குரை விபரங்கள் எனக்கு நேரடியாக தெரியுமா என்றால் தெரியாது. எனது கணவர் படித்து பார்த்து என்னிடம் சொல்வார். சொத்துக்கள் எவ்வாறு எங்களுக்கு பாத்தியம் என்ற விபரத்தை வழக்குரையில் சொல்லியுள்ளேனா என்றால் எனது மாமா எனது அத்தைக்கு பதிவு செய்து கொடுத்தார், அதை நான் எனது அத்தையிடம் பணம் கொடுத்து வாங்கிவிட்டேன். மாமா என்று நான் சொல்வது அழகுக்கோன் என்றும் அத்தை என்று நான்சொல்வது அழகுக்கோன் மனைவி பேச்சியம்மாள் என்றால் சரிதான். ஆதியில் தாவா சொத்து அழகுக்கோனுக்கு பாத்தியப்பட்டது என்றால் எனக்கு தெரியாது. எனது நிரூபண வாக்கு மூலத்திலும், வழக்குரையிலும் தாவா சொத்து ஆதியில் யாருக்கு பாத்தியப்பட்டது என்று சொல்லப்பட்டுள்ள விபரம் எனக்கு தெரியாது என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. பேச்சியம்மாளுக்கு அழகுக்கோன் எந்த ஆவணம், எந்த வருடத்தில் எழுதி வைத்தார் என்ற விபரம் எனக்கு தெரியாது என்று சொன்னால் எனக்கு ஞாபகம் இல்லை. வழக்கு சொத்துக்கள் அனைத்தும் எங்களது பூர்வீக சொத்துக்கள் என்ற விபரத்தை வழக்குரையில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். தாவா சொத்து எங்களுக்கு பூர்வீக பாத்தியம் என்பதை காட்டுவதற்கு ஆவணங்கள் ஏதும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. வழக்கு சொத்துக்கள் அமைாண்புமிகு சார்பு நீதிமன்றம், மானாமதுரை

**O.S. No. 25/2021**

2023ம் ஆண்டு ஜனவரி மாதம் 4-ஆம் தேதி புதன்கிழமை

வா.சா. பூமாதேவி

குறுக்கு விசாரணை: (பிரதிவாதி தரப்பில்)

என்ன பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. வழக்கின் விபரம் எனக்கு நேரடியாக தெரியாது. எனது கணவருக்கு தான் தெரியும். எத்தனை இலக்க சொத்திற்க வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் 3 இலக்க சொத்திற்கு வழக்கு தாக்கல் செய்துள்ளேன். 3 இலக்க சொத்தின் பட்டா எண், சர்வே எண், நான்குமால் தெரியுமா என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. வழக்குரை விபரங்கள் எனக்கு நேரடியாக தெரியுமா என்றால் தெரியாது. எனது கணவர் படித்து பார்த்து என்னிடம் சொல்வார். சொத்துக்கள் எவ்வாறு எங்களுக்கு பாத்தியம் என்ற விபரத்தை வழக்குரையில் சொல்லியுள்ளேனா என்றால் எனது மாமா எனது அத்தைக்கு பதிவு செய்து கொடுத்தார், அதை நான் எனது அத்தையிடம் பணம் கொடுத்து வாங்கிவிட்டேன். மாமா என்று நான் சொல்வது அழகுக்கோன் என்றும் அத்தை என்று நான்சொல்வது அழகுக்கோன் மனைவி பேச்சியம்மாள் என்றால் சரிதான். ஆதியில் தாவா சொத்து அழகுக்கோனுக்கு பாத்தியப்பட்டது என்றால் எனக்கு தெரியாது. எனது நிரூபண வாக்கு மூலத்திலும், வழக்குரையிலும் தாவா சொத்து ஆதியில் யாருக்கு பாத்தியப்பட்டது என்று சொல்லப்பட்டுள்ள விபரம் எனக்கு தெரியாது என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. பேச்சியம்மாளுக்கு அழகுக்கோன் எந்த ஆவணம், எந்த வருடத்தில் எழுதி வைத்தார் என்ற விபரம் எனக்கு தெரியாது என்று சொன்னால் எனக்கு ஞாபகம் இல்லை. வழக்கு சொத்துக்கள் அனைத்தும் எங்களது பூர்வீக சொத்துக்கள் என்ற விபரத்தை வழக்குரையில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். தாவா சொத்து எங்களுக்கு பூர்வீக பாத்தியம் என்பதை காட்டுவதற்கு ஆவணங்கள் ஏதும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. வழக்கு சொத்துக்கள் அனைத்தும் எனது கணவர் பெயரிலோ, அவரது தகப்பனார் பெயரிலோ பட்டா எதுவும் ஏற்படவில்லை என்றால் சரிதான். தாவா சொத்துக்களுக்கு அழகுக்கோனார்

பெயரில் தான் பட்டா உள்ளது என்றால் சரியல்ல, எனது அத்தை பேச்சியம்மாள் பெயரில் பட்டா உள்ளது. எனது அத்தை பேச்சியம்மாள் பெயரில் பட்டா இல்லை என்றும் வழக்கு சமயத்தில் மோசடியாக அவர் பெயரில் பட்டா ஏற்படுத்தி மோசடி ஆவணம் பதிவு செய்துள்ளேன் என்றால் சரியல்ல. பேச்சியம்மாளின் கணவர் அழகுக்கோனாருக்கு 3 மனைவிகள் என்றால் சரிதான். முதல்மனைவி இருளாயி, 2வது மனைவி மற்றொரு இருளாயி, 3ம் மனைவி பெயர் பேச்சியம்மாள் என்றால் சரிதான். நான் எந்த வருடத்தில் திருமணமாகி வந்தேன் என்றால் சுமார் 25 வருடங்கள் இருக்கும். எந்த வருடம் என்று ஞாபகம் இல்லை. அழகுக்கோனாரின் 3 மனைவிகளின் நிலைப்பாடு பற்றி எனக்கு தெரியாது. நான் திருமணமாகி வந்த காலத்தில் 3 மனைவிகளும் இல்லை என்றும் அழகுக்கோன் மட்டும் தான் இருந்தார் என்றால் சரிதான். நான் திருமணமாகி வந்த பொழுது அழகுக்கோன் சாமியாராக திரிந்தார் என்றால் சரிதான். எங்கள் ஊரில் உள்ள கிருஷ்ணன் கோவிலில் அழகுக்கோன் இவர் இறக்கும்வரை 40 வருடங்களாக துறவியாக இருந்தார் என்றால் எனக்கு தெரியாது. அழகுக்கோனின் 3 மனைவிகளுக்கும் வாரிசுகள் உள்ளதா என்ற விபரம் எனக்கு தெரியாது. நான் திருமணமாகி வருவதற்கு முன்பாகவே அழகுக்கோனின் 3 மனைவிகளும் ஊரில் இல்லை என்றால் சரிதான். எனது அத்தைக்கு அழகுக்கோனார் எழுதிவைத்த ஆவணம் பற்றிய விபரம் எனக்கு தெரியாது. அனைத்து விபரங்களும் எனது கணவருக்குத்தான் தெரியும். அழகுக்கோனார் பேச்சியம்மாளுக்கு எழுதிவைத்த ஆவணத்தின் அசல் பத்திரம் யாரிடம் உள்ளது என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. மேற்படி அசல் ஆவணம் பிரதிவாதி முருகனிடம் தான் உள்ளது என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. 1995ம் வருடம் அழகுக்கோனார் பேச்சியம்மாளை கிராம வழக்கப்படி விவாகரத்து செய்து தீர்வை செலுத்திவிட்டார் என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. பேச்சியம்மாளை அழகுக்கோனார் விவாகரத்து செய்யும்பொழுது இருவரும் மறுதிருமணம் செய்து கொள்ளலாம் என ஒப்பந்தம் எழுதிக்கொண்ட விபரம் எனக்கு தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. அவ்வாறு ஒப்பந்தம் ஏற்பட்ட பொழுது பேச்சியம்மாளுக்கு அழகுக்கோனார் எழுதி வைத்த அசல் ஆவணத்தை மீண்டும் பேச்சியம்மாள், அழகுக்கோனாரிடமே ஒப்படைத்துவிட்டார் என்றால் சரியல்ல. விவாகரத்து ஆன பிறகு 1995ம் வருடம் பேச்சியம்மாள் விருதுநகர் மாவட்டம் திருச்சுழி

தாலுகா, உளுத்திமடை கிராமத்திற்கு அருகில் உள்ள புளியங்குளம் கிராமத்தை சேர்ந்த கணபதி என்பவரை மேற்படி பேச்சியம்மாள் மறுதிருமணம் செய்து கொண்டார் என்றால் சரிதான். கணபதியை திருமணம் செய்ததிலிருந்து பேச்சியம்மாள் புளியங்குளம் கிராமத்தில் தான் வசித்து வருகிறார் என்றால் எனக்கு தெரியாது. அழகுக்கோனார் எந்த வருடம் இறந்தார் என்றால் எனக்கு தெரியாது, சுமார் 3, 4 வருடங்கள் இருக்கும். அழகுக்கோனார் பேச்சியம்மாளை விவாகரத்து செய்ததிலிருந்து முருகனின் பராமரிப்பில் தான் இருந்து வந்தார் என்றால் சிறிது காலம் தான் இருந்தார், அதன்பிறகு அவர் எங்கிருந்தார் என்பது எனது கணவருக்குத்தான் தெரியும். எனது கணவரின் அப்பா பெயர் வீரணன். வீரணன் உடன் பிறந்தவர்கள் 2 நபர்கள், கிருஸ்ணன், அழகுக்கோன் ஆகியோர்கள் ஆவார்கள். வீரணன், வீரணன் மகன், கிருஷ்ணன், கிருஷ்ணன் மகன் ஆகியோர்கள் இருந்தும் அழகுக்கோனாரை யாரும் பராமரிக்கவில்லை என்றால் சரியல்ல. அழகுக்கோன் இறந்து 3, 4 வருடங்கள் இருக்கும் என்றால் சரிதான். அழகுக்கோன் உயிருடன் இருக்கும் காலத்தில் 2001ம் வருடத்திலேயே அவரது சொத்துக்களை முருகனுக்கு பதிவு செய்யப்பட்ட உயில் எழுதி வைத்துள்ளார் என்று சொன்னால் எனது கணவருக்குத்தான் தெரியும். நான் திருமணம் செய்து வந்த காலத்திலேயே அழகுக்கோன் முருகனுக்கு உயில் எழுதி வைத்த விபரம் எனக்கு தெரியும் என்றால் என்னிடம் சொன்னார்கள், ஆனால் எப்படி என்ற விபரம் எனக்கு தெரியாது. அழகுக்கோனாரும் அவரது உடன் பிறந்தவர்களும் சொத்துக்களை பிரித்துக்கொண்டதற்கான பாகப்பிரிவினை பத்திரம் உள்ளதா என்றால் எனது கணவரிடம் தான் கேட்கவேண்டும். முருகனிடம் அழகுக்கோன் ஒப்படைத்த சொத்துக்கள் 15 சொத்துக்கள் இருக்கும் என்றால் எனது கணவருக்குத்தான் தெரியும். அழகுக்கோனார் பேச்சியம்மாளுக்கு எழுதி வைத்த சொத்துக்களுக்கு, அழகுக்கோனார் பெயரில் தான் அந்த காலத்திலிருந்து தற்பொழுது வரை பட்டா உள்ளது என்றால் எனக்கு தெரியாது, எனது கணவருக்குத்தான் தெரியும். விவாகரத்து மண முறிவு ஒப்பந்தத்தின்படி அசல் தான செட்டில்மெண்ட்டை பேச்சியம்மாள் அழகுக்கோனாரிடமே ஒப்படைத்ததால் அழகுக்கோனார் பேச்சியம்மாளுக்கு எழதி வைத்த ஆவணம் நடைமுறைக்கே வரவில்லை என்றும் அதனால் பேச்சியம்மாள் பெயரில் பட்டாவும் ஏற்படவில்லை என்றால் சரியல்ல. அழகுக்கோனார் பெயரில் பட்டா எண் 41 ஏற்பட்டு அவர் தான் வரி

செலுத்திவந்தார் என்றும் பேச்சியம்மாள் எந்த காலத்திலும் வரி செலுத்தவில்லை என்றால் சரியல்ல. அழகுக்கோன் பேச்சியம்மாளுக்கு ஆவணம் எழுதிவைத்த விபரம் மற்றும் பேச்சியம்மாள் அசல் ஆவணத்தை அழகுக்கோனிடம் ஒப்படைத்த விபரம் ஆகியவை எனது திருமணத்திற்கு முன் ஏற்பட்டதால் அதுபற்றிய விபரம் எனக்கு தெரியவில்லை என்றால் சரிதான். 2ம் இலக்க சொத்தின் மொத்த விஸ்தீரணம் தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. 2வது இலக்க சொத்திற்கு எவ்வளவு விஸ்தீரணத்திற்கு வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் எனக்கு தெரியாது, எனது கணவருக்கு தான் தெரியும். முருகன் அவரது மனைவி ராஜாத்திக்கு எழுதிவைத்த சொத்து பற்றிய விபரம் எனக்கு தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. 2வது இலக்க சொத்திற்கு முருகன் பெயரிலும் அவரது மனைவி பெயரிலும் தற்பொழுது வரை பட்டா உள்ளது என்றால் சரிதான். 3வது இலக்க சொத்தான கெட்டி கட்டிட தார்சு வீடு அழகுக்கோனார் உயிருடன் இருந்த பொழுது சுப்பையா என்பவருக்கு 04.05.2009ல் பதிவு கிரையம் கொடுத்துவிட்டார் என்றால் சரியல்ல, அது என் அத்தை பெயரில் உள்ளது. 3வது இலக்க சொத்து எனது அத்தை பெயரில் பட்டா ஏற்படவில்லை என்றால் சரியல்ல, அவர் பெயரில் பட்டா உள்ளது. மேற்படி பட்டாவை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் எனது கணவருக்குத்தான் தெரியும். முருகன் தாக்கல் செய்த எதிர்வழக்குரையை எனது கணவர் எனக்கு படித்து காண்பித்தாரா என்றால் படித்து காண்பித்திருப்பார், எனக்கு ஞாபகம் இல்லை. 3வது லக்க சொத்தை கிரையம் பெற்ற சுப்பையா என்பவரை இந்த வழக்கில் சேர்க்கவில்லை என்று எதிர்வழக்குரையில் சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான், ஆனால் சுப்பையாவை இந்த வழக்கில் சேர்க்கவில்லை என்றால் சரிதான். சுப்பையா தற்பொழுது எங்கள் ஊரில் தான் வசிக்கிறார் என்றால் எங்கள் ஊரில் அவருக்கு வீடு உள்ளது, ஆனால் திருப்புவனத்தில் குடியிருந்து வருகிறார். பேச்சியம்மாள் எனக்கு எப்பொழுது ஆவணம் எழுதிக்கொடுத்தார் என்றால் சுமார் 2 வருடங்கள் இருக்கும். அது என்ன ஆவணம் என்று எனக்கு தெரியாது. எவ்வளவு ரூபாய் கொடுத்தோம் என்றால் ரூ.1,00,000/-க்கு மேல் கொடுத்தோம். பேச்சியம்மாள் எனக்கு ஆவணம் எழுதிக்கொடுப்பதற்கு முன்னர் அழகுகோன் பேச்சியம்மாளுக்கு எழுதிக்கொடுத்த செட்டில்மெண்ட் ஆவணம் தொலைந்துபோய்விட்டதாக எனது கணவர் திருப்புவனம் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார் என்றால் சரிதான். என்ன புகார் என்பது எனக்கு தெரியாது.

பேச்சியம்மாள் பெயரில் புகார் எழுதி எனது கணவரே பேச்சியம்மாளின் கையெழுத்தை போட்டு காவல் நிலையதில் புகார் கொடுத்தார் என்றால் சரியல்ல, பேச்சியம்மாள் தான் கையெழுத்து போட்டார். பேச்சியம்மாள் கையெழுத்து போடுவாரா, ரேகை வைப்பாரா என்றால் ரேகை தான் வைப்பார். காவல்நிலையத்தில் கொடுத்த புகாரில் உள்ள ரேகை எனது கணவர் வைத்த ரேகை என்றால் சரியல்ல. பேச்சியம்மாள் எனக்கு எழுதிக்கொடுத்த பத்திர ஆவணத்தில் பேச்சியம்மாளின் ஆதார் அட்டையில் க.பேச்சி என்று உள்ளது என்றால் சரிதான். அந்த ஆவணத்துடன் இணைக்கப்பட்டுள்ள வாக்காளர் அடையாள அட்டையிலும் பேச்சியின் கணவர் பெயர் கணபதி என்று தான் உள்ளது என்றால் சரிதான். வாக்காளர் அடையாள அட்டை 01.01.1999ல் வழங்கப்பட்டதாக உள்ளது என்றால் சரிதான். வா.சா,ஆ.3 ஆவணத்தில் பேச்சியம்மாளின் கணவர் அழகுக்கோன் என்பதை காட்டக்கூடிய அடையாள ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ,3 ஆவணத்துடன் இணைத்துள்ள குடும்ப அட்டையிலும் பேச்சியம்மாள், கணவர் பெயர் கணபதி மற்றும் 2 பிள்ளைகள் என்று காண்பிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். காவல்நிலையத்தில் பேச்சியம்மாளை வைத்து எனது கணவர் கொடுத்த புகாரிலும் கணபதியின் மனைவி பேச்சியம்மாள் என்று தான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.3 ஆவணத்தில் இணைக்கப்பட்டுள்ள அடையாள ஆவணங்கள் அனைத்திலும் கணபதி மனைவி பேச்சியம்மாள் என்று தான் காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். கணபதி என்ற நபர் வேறு, அழகுக்கோனார் என்ற நபர் வேறு என்றால் சரிதான். வா.சா.ஆ.3 ஆவணத்தை நானும் எனது கணவரும் மோசடியாக உற்பத்தி செய்வதற்காக கணபதி மற்றும் அழகுக்கோன் ஆகிய இருவரையும் ஒரேநபராக கணபதி என்ற அழகுக்கோன் என்று காட்டி குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. வெவ்வேறு நபர்களை ஒரே நபராக கண்டு அசல் ஆவணம் பிரதிவாதியிடம் இருப்பதை மறைத்து அசல் ஆவணம் தொலைந்து போனதாக திருப்புவனம் காவல் நிலையத்தில் மோசடியாக ஆவணம் பெற்று வா.சா.ஆ.3 ஆவணத்தை உற்பத்தி செய்துள்ளோம் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.3 ஆவணம் மோசடியாக உற்பத்தி செய்ததால் தான் வா.சா.ஆ.3 ஆவணத்தை ரத்து செய்யக்கோரி பிரதிவாதி பதிவுத்துறை ஐ.ஜி யிடம் புகார் கொடுத்து எங்களுக்கு அறிவிப்பு அனுப்பப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. வா.சா.ஆ.3ஆவணம் போலியாக உற்பத்தி செய்ததால் அதை ரத்து

செய்யநடவடிக்கை நடந்து வருகிறது என்றும் அந்த நடவடிக்கையிலிருந்து தப்பிப்பதற்காகத்தான் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. பேச்சியம்மாள் எந்த காலத்திலும் சுவாதீனம் எடுத்து அனுபவம் செய்யவில்லை என்றும் அதனால் தான் பேச்சியம்மாள் பெயரில் தாவா சொத்துக்களுக்கு பட்டாவும் வரி ரசீதும் ஏற்படவில்லை என்றால் சரியல்ல. பேச்சியம்மாள் பெயரில் உள்ள பட்டா, ரசீதுகளை வழக்குரையுடன் தாக்கல் செய்யவிலல்ல என்றால் எனது கணவருக்குத்தான் தெரியும், எனக்கு தெரியாது. 10.09.2001ம் தேதி அழகுக்கோனார் பிரதிவாதி முருகனுக்கு எழுதிவைத்த பதிவு உயில், அழகுக்கோனார் நல்ல உடல் மற்றும் மன நிலையில் இருந்த பொழுது எழுதி வைக்கப்பட்ட உயில் என்றும் அது சட்டப்படி செல்லுபடியாகக்கூடியது என்றும் அதை ரத்து செய்ய கோர எங்களுக்கு உரிமை இல்லை என்றால் சரியல்ல. 2001ல் பதிவு உயில் எழுதிவைத்த அழகுக்கோனார் 2020ல் தான் இறந்தார் என்றால் சரிதான். அழகுக்கோனார் இறப்பதற்கு முன்னர் 2001ல் எழுதி வைத்த உயிலை அவர் இறக்கும் வரை ரத்து செய்யவில்லை என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. பிரதிவாதி அழகுக்கோனாரை 1995ம் வருடத்திலிருந்து பராமரித்து வந்ததால் தான் பிரதிவாதி மீது ஏற்பட்ட அபிமானத்தில் 10.09.2001ல் அழகுக்கோனார் பிரதிவாதி முருகன் மீது உயில் முருகன் அழகுக்கோனாரை அழகுக்கோனாரை முருகன் சுமார் 25 வருடங்களுக்குமேல் பராமரித்திருப்பாரா என்றால் சரியல்ல, சுமார் 3 வருடங்கள் பராமரித்தார். அழகுக்கோனார் இறப்பதற்கு 3 வருடங்களுக்கு முன்பாக இருந்து முருகனின் பராமரிப்பில் இருந்தார். அதற்கு முன்பு அழகுக்கோனார் கோவிலில் தான் இருந்தார் என்றால் சரிதான். அழகுக்கோனாரை எந்த காலத்திலும் இரத்தசம்மந்தமான உறவுகள் அவரை பராமரிக்கவில்லை என்றால் சரியல்ல. முருகனுக்கு அழகுக்கோனார் எழுதிவைத்த உயில் படி சொத்துக்கள் முருகனுக்கு பாத்தியமாகி அவர் அனுபவத்தில் இருந்துவருகிறது என்றால் சரியல்ல. உயில்படி முருகனுக்கு பாத்தியப்பட்ட தாவா சொத்தை அபகரிக்க தாவா வழக்கு தாக்கல் செய்யப்பட்டு வா.சா.ஆ.3 ஆவணம் மோசடியாக உருவாக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. வழக்கில் கோரிய பரிகாரங்கள் எதுவும் எங்களுக்கு கிடைக்கத்தக்கது அல்ல என்றால் சரியல்ல.

சாட்சி திறந்த நீதிமன்றத்தில் என்
முன்னால் சாட்சியம் சொல்ல என்னால்

கேட்கப்பட்டு தட்டச்சருக்கு கூறி அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது

சார்பு நீதிபதி

மானாமதுரைனத்தும் எனது கணவர் பெயரிலோ, அவரது தகப்பனார் பெயரிலோ பட்டா எதுவும் ஏற்படவில்லை என்றால் சரிதான். தாவா சொத்துக்களுக்கு அழகுக்கோனார் பெயரில் தான் பட்டா உள்ளது என்றால் சரியல்ல, எனது அத்தை பேச்சியம்மாள் பெயரில் பட்டா உள்ளது. எனது அத்தை பேச்சியம்மாள் பெயரில் பட்டா இல்லை என்றும் வழக்கு சமயத்தில் மோசடியாக அவர் பெயரில் பட்டா ஏற்படுத்தி மோசடி ஆவணம் பதிவு செய்துள்ளேன் என்றால் சரியல்ல. பேச்சியம்மாளின் கணவர் அழகுக்கோனாருக்கு 3 மனைவிகள் என்றால் சரிதான். முதல்மனைவி இருளாயி, 2வது மனைவி மற்றொரு இருளாயி, 3ம் மனைவி பெயர் பேச்சியம்மாள் என்றால் சரிதான். நான் எந்த வருடத்தில் திருமணமாகி வந்தேன் என்றால் சுமார் 25 வருடங்கள் இருக்கும். எந்த வருடம் என்று ஞாபகம் இல்லை. அழகுக்கோனாரின் 3 மனைவிகளின் நிலைப்பாடு பற்றி எனக்கு தெரியாது. நான் திருமணமாகி வந்த காலத்தில் 3 மனைவிகளும் இல்லை என்றும் அழகுக்கோன் மட்டும் தான் இருந்தார் என்றால் சரிதான். நான் திருமணமாகி வந்த பொழுது அழகுக்கோன் சாமியாராக திரிந்தார் என்றால் சரிதான். எங்கள் ஊரில் உள்ள கிருஷ்ணன் கோவிலில் அழகுக்கோன் இவர் இறக்கும்வரை 40 வருடங்களாக துறவியாக இருந்தார் என்றால் எனக்கு தெரியாது. அழகுக்கோனின் 3 மனைவிகளுக்கும் வாரிசுகள் உள்ளதா என்ற விபரம் எனக்கு தெரியாது. நான் திருமணமாகி வருவதற்கு முன்பாகவே அழகுக்கோனின் 3 மனைவிகளும் ஊரில் இல்லை என்றால் சரிதான். எனது அத்தைக்கு அழகுக்கோனார் எழுதிவைத்த ஆவணம் பற்றிய விபரம் எனக்கு தெரியாது. அனைத்து விபரங்களும் எனது கணவருக்குத்தான் தெரியும். அழகுக்கோனார் பேச்சியம்மாளுக்கு எழுதிவைத்த ஆவணத்தின் அசல் பத்திரம் யாரிடம் உள்ளது என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. மேற்படி அசல் ஆவணம் பிரதிவாதி முருகனிடம் தான் உள்ளது என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. 1995ம் வருடம் அழகுக்கோனார் பேச்சியம்மாளை கிராம வழக்கப்படி விவாகரத்து செய்து தீர்வை செலுத்திவிட்டார் என்றால்

எனக்கு ஞாபகம் இல்லை. பேச்சியம்மாளை அழகுக்கோனார் விவாகரத்து செய்யும்பொழுது இருவரும் மறுதிருமணம் செய்து கொள்ளலாம் என ஒப்பந்தம் எழுதிக்கொண்ட விபரம் எனக்கு தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. அவ்வாறு ஒப்பந்தம் ஏற்பட்ட பொழுது பேச்சியம்மாளுக்கு அழகுக்கோனார் எழுதி வைத்த அசல் ஆவணத்தை மீண்டும் பேச்சியம்மாள், அழகுக்கோனாரிடமே ஒப்படைத்துவிட்டார் என்றால் சரியல்ல. விவாகரத்து ஆன பிறகு 1995ம் வருடம் பேச்சியம்மாள் விருதுநகர் மாவட்டம் திருச்சுழி தாலுகா, உளுத்திமடை கிராமத்திற்கு அருகில் உள்ள புளியங்குளம் கிராமத்தை சேர்ந்த கணபதி என்பவரை மேற்படி பேச்சியம்மாள் மறுதிருமணம் செய்து கொண்டார் என்றால் சரிதான். கணபதியை திருமணம் செய்ததிலிருந்து பேச்சியம்மாள் புளியங்குளம் கிராமத்தில் தான் வசித்து வருகிறார் என்றால் எனக்கு தெரியாது. அழகுக்கோனார் எந்த வருடம் இறந்தார் என்றால் எனக்கு தெரியாது, சுமார் 3, 4 வருடங்கள் இருக்கும். அழகுக்கோனார் பேச்சியம்மாளை விவாகரத்து செய்ததிலிருந்து முருகனின் பராமரிப்பில் தான் இருந்து வந்தார் என்றால் சிறிது காலம் தான் இருந்தார், அதன்பிறகு அவர் எங்கிருந்தார் என்பது எனது கணவருக்குத்தான் தெரியும். எனது கணவரின் அப்பா பெயர் வீரணன். வீரணன் உடன் பிறந்தவர்கள் 2 நபர்கள், கிருஸ்ணன், அழகுக்கோன் ஆகியோர்கள் ஆவார்கள். வீரணன், வீரணன் மகன், கிருஷ்ணன், கிருஷ்ணன் மகன் ஆகியோர்கள் இருந்தும் அழகுக்கோனாரை யாரும் பராமரிக்கவில்லை என்றால் சரியல்ல. அழகுக்கோன் இறந்து 3, 4 வருடங்கள் இருக்கும் என்றால் சரிதான். அழகுக்கோன் உயிருடன் இருக்கும் காலத்தில் 2001ம் வருடத்திலேயே அவரது சொத்துக்களை முருகனுக்கு பதிவு செய்யப்பட்ட உயில் எழுதி வைத்துள்ளார் என்று சொன்னால் எனது கணவருக்குத்தான் தெரியும். நான் திருமணம் செய்து வந்த காலத்திலேயே அழகுக்கோன் முருகனுக்கு உயில் எழுதி வைத்த விபரம் எனக்கு தெரியும் என்றால் என்னிடம் சொன்னார்கள், ஆனால் எப்படி என்ற விபரம் எனக்கு தெரியாது. அழகுக்கோனாரும் அவரது உடன் பிறந்தவர்களும் சொத்துக்களை பிரித்துக்கொண்டதற்கான பாகப்பிரிவினை பத்திரம் உள்ளதா என்றால் எனது கணவரிடம் தான் கேட்கவேண்டும். முருகனிடம் அழகுக்கோன் ஒப்படைத்த சொத்துக்கள் 15 சொத்துக்கள் இருக்கும் என்றால் எனது கணவருக்குத்தான் தெரியும். அழகுக்கோனார் பேச்சியம்மாளுக்கு எழுதி வைத்த சொத்துக்களுக்கு, அழகுக்கோனார் பெயரில் தான் அந்த

காலத்திலிருந்து தற்பொழுது வரை பட்டா உள்ளது என்றால் எனக்கு தெரியாது, எனது கணவருக்குத்தான் தெரியும். விவாகரத்து மண முறிவு ஒப்பந்தத்தின்படி அசல் தான செட்டில்மெண்ட்டை பேச்சியம்மாள் அழகுக்கோனாரிடமே ஒப்படைத்ததால் அழகுக்கோனார் பேச்சியம்மாளுக்கு எழதி வைத்த ஆவணம் நடைமுறைக்கே வரவில்லை என்றும் அதனால் பேச்சியம்மாள் பெயரில் பட்டாவும் ஏற்படவில்லை என்றால் சரியல்ல. அழகுக்கோனார் பெயரில் பட்டா எண் 41 ஏற்பட்டு அவர் தான் வரி செலுத்திவந்தார் என்றும் பேச்சியம்மாள் எந்த காலத்திலும் வரி செலுத்தவில்லை என்றால் சரியல்ல. அழகுக்கோன் பேச்சியம்மாளுக்கு ஆவணம் எழுதிவைத்த விபரம் மற்றும் பேச்சியம்மாள் அசல் ஆவணத்தை அழகுக்கோனிடம் ஒப்படைத்த விபரம் ஆகியவை எனது திருமணத்திற்கு முன் ஏற்பட்டதால் அதுபற்றிய விபரம் எனக்கு தெரியவில்லை என்றால் சரிதான். 2ம் இலக்க சொத்தின் மொத்த விஸ்தீரணம் தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. 2வது இலக்க சொத்திற்கு எவ்வளவு விஸ்தீரணத்திற்கு வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் எனக்கு தெரியாது, எனது கணவருக்கு தான் தெரியும். முருகன் அவரது மனைவி ராஜாத்திக்கு எழுதிவைத்த சொத்து பற்றிய விபரம் எனக்கு தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. 2வது இலக்க சொத்திற்கு முருகன் பெயரிலும் அவரது மனைவி பெயரிலும் தற்பொழுது வரை பட்டா உள்ளது என்றால் சரிதான். 3வது இலக்க சொத்தான கெட்டி கட்டிட தார்சு வீடு அழகுக்கோனார் உயிருடன் இருந்த பொழுது சுப்பையா என்பவருக்கு 04.05.2009ல் பதிவு கிரையம் கொடுத்துவிட்டார் என்றால் சரியல்ல, அது என் அத்தை பெயரில் உள்ளது. 3வது இலக்க சொத்து எனது அத்தை பெயரில் பட்டா ஏற்படவில்லை என்றால் சரியல்ல, அவர் பெயரில் பட்டா உள்ளது. மேற்படி பட்டாவை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் எனது கணவருக்குத்தான் தெரியும். முருகன் தாக்கல் செய்த எதிர்வழக்குரையை எனது கணவர் எனக்கு படித்து காண்பித்தாரா என்றால் படித்து காண்பித்திருப்பார், எனக்கு ஞாபகம் இல்லை. 3வது லக்க சொத்தை கிரையம் பெற்ற சுப்பையா என்பவரை இந்த வழக்கில் சேர்க்கவில்லை என்று எதிர்வழக்குரையில் சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான், ஆனால் சுப்பையாவை இந்த வழக்கில் சேர்க்கவில்லை என்றால் சரிதான். சுப்பையா தற்பொழுது எங்கள் ஊரில் தான் வசிக்கிறார் என்றால் எங்கள் ஊரில் அவருக்கு வீடு உள்ளது, ஆனால் திருப்புவனத்தில் குடியிருந்து வருகிறார்.

பேச்சியம்மாள் எனக்கு எப்பொழுது ஆவணம் எழுதிக்கொடுத்தார் என்றால் சுமார் 2 வருடங்கள் இருக்கும். அது என்ன ஆவணம் என்று எனக்கு தெரியாது. எவ்வளவு ரூபாய் கொடுத்தோம் என்றால் ரூ.1,00,000/-க்கு மேல் கொடுத்தோம். பேச்சியம்மாள் எனக்கு ஆவணம் எழுதிக்கொடுப்பதற்கு முன்னர் அழகுகோன் பேச்சியம்மாளுக்கு எழுதிக்கொடுத்த செட்டில்மெண்ட் ஆவணம் தொலைந்துபோய்விட்டதாக எனது கணவர் திருப்புவனம் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார் என்றால் சரிதான். என்ன புகார் என்பது எனக்கு தெரியாது. பேச்சியம்மாள் பெயரில் புகார் எழுதி எனது கணவரே பேச்சியம்மாளின் கையெழுத்தை போட்டு காவல் நிலையதில் புகார் கொடுத்தார் என்றால் சரியல்ல, பேச்சியம்மாள் தான் கையெழுத்து போட்டார். பேச்சியம்மாள் கையெழுத்து போடுவாரா, ரேகை வைப்பாரா என்றால் ரேகை தான் வைப்பார். காவல்நிலையத்தில் கொடுத்த புகாரில் உள்ள ரேகை எனது கணவர் வைத்த ரேகை என்றால் சரியல்ல. பேச்சியம்மாள் எனக்கு எழுதிக்கொடுத்த பத்திர ஆவணத்தில் பேச்சியம்மாளின் ஆதார் அட்டையில் க.பேச்சி என்று உள்ளது என்றால் சரிதான். அந்த ஆவணத்துடன் இணைக்கப்பட்டுள்ள வாக்காளர் அடையாள அட்டையிலும் பேச்சியின் கணவர் பெயர் கணபதி என்று தான் உள்ளது என்றால் சரிதான். வாக்காளர் அடையாள அட்டை 01.01.1999ல் வழங்கப்பட்டதாக உள்ளது என்றால் சரிதான். வா.சா,ஆ.3 ஆவணத்தில் பேச்சியம்மாளின் கணவர் அழகுக்கோன் என்பதை காட்டக்கூடிய அடையாள ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ,3 ஆவணத்துடன் இணைத்துள்ள குடும்ப அட்டையிலும் பேச்சியம்மாள், கணவர் பெயர் கணபதி மற்றும் 2 பிள்ளைகள் என்று காண்பிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். காவல்நிலையத்தில் பேச்சியம்மாளை வைத்து எனது கணவர் கொடுத்த புகாரிலும் கணபதியின் மனைவி பேச்சியம்மாள் என்று தான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.3 ஆவணத்தில் இணைக்கப்பட்டுள்ள அடையாள ஆவணங்கள் அனைத்திலும் கணபதி மனைவி பேச்சியம்மாள் என்று தான் காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். கணபதி என்ற நபர் வேறு, அழகுக்கோனார் என்ற நபர் வேறு என்றால் சரிதான். வா.சா.ஆ.3 ஆவணத்தை நானும் எனது கணவரும் மோசடியாக உற்பத்தி செய்வதற்காக கணபதி மற்றும் அழகுக்கோன் ஆகிய இருவரையும் ஒரேநபராக கணபதி என்ற அழகுக்கோன் என்று காட்டி குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. வெவ்வேறு நபர்களை ஒரே நபராக கண்டு அசல் ஆவணம்

பிரதிவாதியிடம் இருப்பதை மறைத்து அசல் ஆவணம் தொலைந்து போனதாக திருப்புவனம் காவல் நிலையத்தில் மோசடியாக ஆவணம் பெற்று வா.சா.ஆ.3 ஆவணத்தை உற்பத்தி செய்துள்ளோம் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.3 ஆவணம் மோசடியாக உற்பத்தி செய்ததால் தான் வா.சா.ஆ.3 ஆவணத்தை ரத்து செய்யக்கோரி பிரதிவாதி பதிவுத்துறை ஐ.ஜி யிடம் புகார் கொடுத்து எங்களுக்கு அறிவிப்பு அனுப்பப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. வா.சா.ஆ.3ஆவணம் போலியாக உற்பத்தி செய்ததால் அதை ரத்து செய்யநடவடிக்கை நடந்து வருகிறது என்றும் அந்த நடவடிக்கையிலிருந்து தப்பிப்பதற்காகத்தான் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. பேச்சியம்மாள் எந்த காலத்திலும் சுவாதீனம் எடுத்து அனுபவம் செய்யவில்லை என்றும் அதனால் தான் பேச்சியம்மாள் பெயரில் தாவா சொத்துக்களுக்கு பட்டாவும் வரி ரசீதும் ஏற்படவில்லை என்றால் சரியல்ல. பேச்சியம்மாள் பெயரில் உள்ள பட்டா, ரசீதுகளை வழக்குரையுடன் தாக்கல் செய்யவிலல்ல என்றால் எனது கணவருக்குத்தான் தெரியும், எனக்கு தெரியாது. 10.09.2001ம் தேதி அழகுக்கோனார் பிரதிவாதி முருகனுக்கு எழுதிவைத்த பதிவு உயில், அழகுக்கோனார் நல்ல உடல் மற்றும் மன நிலையில் இருந்த பொழுது எழுதி வைக்கப்பட்ட உயில் என்றும் அது சட்டப்படி செல்லுபடியாகக்கூடியது என்றும் அதை ரத்து செய்ய கோர எங்களுக்கு உரிமை இல்லை என்றால் சரியல்ல. 2001ல் பதிவு உயில் எழுதிவைத்த அழகுக்கோனார் 2020ல் தான் இறந்தார் என்றால் சரிதான். அழகுக்கோனார் இறப்பதற்கு முன்னர் 2001ல் எழுதி வைத்த உயிலை அவர் இறக்கும் வரை ரத்து செய்யவில்லை என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. பிரதிவாதி அழகுக்கோனாரை 1995ம் வருடத்திலிருந்து பராமரித்து வந்ததால் தான் பிரதிவாதி மீது ஏற்பட்ட அபிமானத்தில் 10.09.2001ல் அழகுக்கோனார் பிரதிவாதி முருகன் மீது உயில் முருகன் அழகுக்கோனாரை அழகுக்கோனாரை முருகன் சுமார் 25 வருடங்களுக்குமேல் பராமரித்திருப்பாரா என்றால் சரியல்ல, சுமார் 3 வருடங்கள் பராமரித்தார். அழகுக்கோனார் இறப்பதற்கு 3 வருடங்களுக்கு முன்பாக இருந்து முருகனின் பராமரிப்பில் இருந்தார். அதற்கு முன்பு அழகுக்கோனார் கோவிலில் தான் இருந்தார் என்றால் சரிதான். அழகுக்கோனாரை எந்த காலத்திலும் இரத்தசம்மந்தமான உறவுகள் அவரை பராமரிக்கவில்லை என்றால் சரியல்ல. முருகனுக்கு அழகுக்கோனார் எழுதிவைத்த உயில் படி சொத்துக்கள் முருகனுக்கு பாத்தியமாகி அவர் அனுபவத்தில் இருந்துவருகிறது என்றால்

சரியல்ல. உயில்படி முருகனுக்கு பாத்தியப்பட்ட தாவா சொத்தை அபகரிக்க தாவா வழக்கு தாக்கல் செய்யப்பட்டு வா.சா.ஆ.3 ஆவணம் மோசடியாக உருவாக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. வழக்கில் கோரிய பரிகாரங்கள் எதுவும் எங்களுக்கு கிடைக்கத்தக்கது அல்ல என்றால் சரியல்ல.

சாட்சி திறந்த நீதிமன்றத்தில் என் முன்னால் சாட்சியம் சொல்ல என்னால் கேட்கப்பட்டு தட்டச்சருக்கு கூறி அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது

சார்பு நீதிபதி
மானாமதுரை